SIVANMANAI



# திருவாசகம்

**பதிகம்: திருப்புலம்பல்**

**திருவாரூரீல் அருளியது**

* * * * *

## திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

* * * * *

பூங்கமலத்து அயனொடுமால் அறியாத நெறியானே
கோங்குஅலர்சேர் குவிமுலையாள் கூறாவெண்ணீறுஆடி
ஓங்குஎயில்சூழ் திருவாரூர் உடையானே அடியேன்நின்
பூங்கழல்கள் அவை அல்லாது எவையாதும் புகழேனே.

சடையானே தழல்ஆடி தயங்கு மூஇலைச்சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையாய் அடியேன்நான்
உடையானே உனைஅல்லாது உறுதுணை மற்றுஅறியேனே.

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனிஅமையும்
குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா உன்குரை கழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துஉருக வேண்டுவனே.

## திருச்சிற்றம்பலம்

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

* * * * *

THIRUVASAGAM GROUP
Scan this QR code using the WhatsApp Camera to join this group